## ABSTRACT

Forests – The Nilgiris District – Kundah Taluk - No.5, (Old No.14) Kil kundah Village – Geddai Additional Forest Block - Survey Number 900 (Old Survey Number 320) - An extent of 22.21 Hectare - Declaration as Reserved Forest under section 16 of Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification - Approved – Orders - Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.13) Department**

**G.O.(Ms) No.67**

**Dated: 07.05.2024**
**குரோதி, சித்திரை-24**
**திருவள்ளுவர் ஆண்டு-2055**
**Read:**

1. G.O(Ms)No.58, Environment and Forests (FR.III) Department, dated.16.02.1993.
2. From the Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai-15. Letter No.TS2/24534/2019, dated 16.09.2022.

=====

**ORDER** :

The proposal received from the Principal Chief Conservator of Forests in his letter 2nd read above for declaration of an area of 22.21 Hectare situated in Survey Number 900 (Old Survey Number 320) of No.5, (Old No.14) Kil kundah Village, Geddai Additional Forest Block, Kundah Taluk in the Nilgiris District as Reserved Forest under section 16 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 29.05.2024 and in Tamil in the Nilgiris District Gazette, Dated 12.06.2024.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notification is published in the Tamil Nadu Government Gazette, Dated 29.05.2024. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Salem is requested to take action to publish it in the Nilgiris District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said Notification both in English and Tamil versions are communicated to the Officers as shown in the Annexure to this order.

..2.

4. The District Collector, the Nilgiris and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notification and bring to the notice of the Government, delay if any, in publication.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press,
Chennai – 1.
The Branch Manager,
Government Branch Press, Salem.
The Additional Chief Secretary/
Commissioner of Land Administration, Chennai – 5.
The Principal Chief Conservator of Forests
(Head of Department),
Chennai – 32.
The District Collector, The Nilgiris.
The Additional Principal Chief Conservator of Forests, Coimbatore.
The District Forest Officer, The Nilgiris.
The Forest Settlement Officer, Gudalur.

**Copy to**:-
The Revenue and Disaster Management (LD-4) Department,
Chennai – 9.
The Law (E,CC&F-Sty) Department, Chennai – 9.
The Additional Chief Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9.
Stock File/Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

S. Mohamed Yusuf 7/5/2024
SECTION OFFICER
07/05/2024

**Annexure to G.O.(Ms)No.67**

**Environment, Climate Change and Forest (FR.13) Department,**

**Dated: 07.05.2024**

| Sl. No. | Designation and Address of the Officers | English | Tamil |
|---|---|---|---|
| 1. | The Additional Chief Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009. | 2 | 2 |
| 2. | The Principal Chief Conservator of Forests (Head of Department), Chennai – 600 032. | 3 | 3 |
| 3. | The District Collector, Nilgiris. | 2 | 2 |
| 4. | The Additional Principal Chief Conservator of Forests, Coimbatore. | 5 | 5 |
| 5. | The District Forest Officer, Nilgiris. | 12 | 12 |
| 6. | The Forest Settlement Officer, Gudalur. | 8 | 8 |

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 7/5/2024
Section Officer
07/05/2024

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by section 16 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that the area, the boundaries of which are specified in the Scheduled below, as reserved forest with effect on and from 06.11.2024.

## THE SCHEDULE.

| | | |
|---|---|---|
| 1. | Name of the District | The Nilgiris |
| 2. | Name of the Taluk | Kundah |
| 3. | Number and Name of the Village | 5 (Old No.14), Kill Kundah |
| 4. | Name of the Forest Block | Geddai Additional Forest Block |
| 5. | Survey Number | 900 (Old Survey No.320) |
| 6. | Extent of the Forest Block | 22.21 Hectare |

## BOUNDARIES.

**North.-** The boundary Starts from the tri-junction point of Survey Numbers 882 (Old Survey Number 335), 883 (Old Survey Number 330) and 900 (Old Survey Number 320) of No.5 (Old No.14) Kil-Kundah Village and runs towards northeast, southeast along the southern boundaries of Survey Numbers 883 (Old Survey Number 330) and 895 (Old Survey Number 321) of No.5 (old No.14) Kil-Kundah Village till it reaches the junction point of Survey Numbers 900 (Old Survey Number 320), 895 (Old Survey Number 321), 899 (Old Survey Number 386) and 898 (Old Survey Number 318) of No.5 (old No.14) Kil-Kundah village.

**East.-** Thence, the boundary runs towards south, east, southeast along the western boundary of Survey No. 898 (Old Survey Number 318) of No.5 (old No.14), Kil-Kundah Village till it reaches the tri-junction point of Survey Number 900 (Old Survey Number 320), 898 (Old Survey Number 318) and 903 (Old Survey No.319) of No.5 (Old No.14), Kil-Kundah Village.

**South.-** Thence, the boundary runs towards west, north, northwest, southwest, northwest and southwest along the Northern boundary of Survey Numbers 903 (Old Survey Number 319) and 901 (Old Survey Number 384) of No.5 (Old No.14), Kil-Kundah Village till it reaches the junction point of No.07, Kinnakorai village, No.06, Mel-Kundah Village and Survey Number 882 (Old Survey Number 335), 900 (Old Survey Number 320), 901 (Old Survey Number 384) of No.5 (Old No.14), Kil-Kundah Village.

**West.-** Thence, the boundary runs towards Northeast along the southwest boundary of Survey Number 882 (Old Survey Number 335) of No.5 (Old No.14), Kil-Kundah Village and it reaches the starting point.

..6.

**The following Rights are allowed with in the blocks:-**

1. To use the motorable road by M/s. L.G.B Estate and Public to a width of 20 links (or) 4 meters starting from western boundary of Survey Number 898 (Old Survey No.318) and enters into the Forest Block cutting its 'F' line measuring 518 links at a cutting distance of 295 links and runs towards west through the Forest Block with a (Distance) length of 3653 links (or) 730.60 meters and exit into Survey Number 882 (Old No. 335) (L.G.B Estate) cutting its 'F' Line measuring 2687 links at a cutting distances of 2055 links from its southern boundary of the Survey Number 900 (Old No 320) of No.5 (Old No.14), Kil-Kundah Village with a following magnetic bearings and distances the M/s. L.G.B Estate management is permitted to maintain the road with prior permission from the District Forest Officer as and when required.

| Station from | To | Magnetic Bearing (In Degree) | Distance (In Links) |
|---|---|---|---|
| 1 | 2 | 228 (BB) | 320 |
| 2 | 3 | 240 (BB) | 83 |
| 3 | 4 | 296 ½ (BB) | 190 |
| 4 | 5 | 254 ½ (BB) | 243 |
| 5 | 6 | 276½ (BB) | 253 |
| 6 | 7 | 233½ (BB) | 128 |
| 7 | 8 | 251½ (BB) | 276 |
| 8 | 9 | 251(BB) | 250 |
| 9 | 10 | 264(BB) | `115 |
| 10 | 11 | 252(BB) | 135 |
| 11 | 12 | 252(BB) | 170 |
| 12 | 13 | 244 ½ (BB) | 120 |
| 13 | 14 | 246½ (BB) | 145 |
| 14 | 15 | 245(BB) | 215 |
| 15 | 16 | 280(BB) | 220 |
| 16 | 23 | 295½ (BB) | 360 |
| 23 | 24 | 258½ (BB) | 163 |
| 24 | 25 | 267½ (BB) | 267 |
| | | **Total** | **3653 links (or) 730.60 Meters** |

2. In addition to the Right allowed in Sl.No.1 above Thiru.R.Karunanidhi, Karthick plantations is also permitted to use the mud road (approach road) diverted from the above motorable road at station No.16 of Right No. 1 and passing towards southwest through the Forest Block to a length of 1202 links or 240.40 meters and width of 4 meters cutting its 'F' line measurement of 189 links at a cutting distances of 35 links on the Northern boundary of Survey Number 901 (Old No.384) with the following magnetic bearing and distances and Thiru. R. Karunanidhi is also permitted to maintain the road with prior permission from the District Forest Officer as and when required.

| Station | | Magnetic Bearing (In Degree) | Distance (In Links) |
|---|---|---|---|
| From | To | | |
| 16 | 17 | 269½ (BB) | 214 |
| 17 | 18 | 248½ (BB) | 279 |
| 18 | 19 | 248½ (BB) | 139 |
| 19 | 20 | 236(BB) | 339 |
| 20 | 21 | 245½ (BB) | 150 |
| 21 | 22 | 154½ (BB) | 81 |
| | | **Total** | **1202 links (or) 240.40 meters** |

3. An existing water pipe line of 3" diameter and 1500 links length passing on the northern side of the Forest Block is allowed. The Executive Engineer, pegumballa camp and his staffs permitted to maintain the pipe line with prior permission of the District Forest Officer as and when required.

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 7/5/2024
Section Officer
07/05/2024

## சுருக்கம்

வனம் - நீலகிரி மாவட்டம் - குந்தா வட்டம் - எண்.5, (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் - கெத்தை கூடுதல் வன வட்டாரம் - நில அளவை எண் 900 (பழைய நில அளவை எண் 320) -ல் உள்ள 22.21 எக்டேர் நிலம் - தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16-ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை**

**அரசாணை (நிலை) எண்.67**

**நாள்: 07.05.2024**
**குரோதி, சித்திரை-24**
**திருவள்ளுவர் ஆண்டு-2055**

**படிக்க:**

1. அரசாணை(நிலை)எண்.58, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.3) துறை, நாள்.16.02.1993.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-15. கடித எண்.டி எஸ்2/24534/202, நாள். 16.09.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், எண்.5, (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம், கெத்தை கூடுதல் வன வட்டாரம், நில அளவை எண்.900 (பழைய நில அளவை எண். 320) -ல் உள்ள 22.21 எக்டேர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16-ன் கீழ் காப்பு வனமாக அமைக்க கோரும் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 29.05.2024-ல் ஆங்கிலத்திலும், நீலகிரி மாவட்டம் அரசிதழ் நாள் 12.06.2024-ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

..2.

2. 29.05.2024-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் நீலகிரி மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு சேலம் அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை நீலகிரி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், சேலம்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி.
கூடுதல் தலைமை வனப்பாதுகாவலர், கோயம்புத்தூர்.
மாவட்ட வன அலுவலர், நீலகிரி.
வன நிர்ணய அலுவலர், கூடலூர்.

<u>நகல்</u>:-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை-9.
சட்டத் (E,CC&F-Sty) துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9.
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

7/5/2024.
பிரிவு அலுவலர்
07/05/2024

**அரசு ஆணை (நிலை) எண்.67**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 07.05.2024-ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை – 600 009. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை - 600 032. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், நீலகிரி. | 2 | 2 |
| 4. | கூடுதல் தலைமை வனப்பாதுகாவலர், கோயம்புத்தூர். | 5 | 5 |
| 5. | மாவட்ட வன அலுவலர், நீலகிரி. | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், கடலூர். | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

7/5/2024.
பிரிவு அலுவலர்
07/05/2024

## பிற்சேர்க்கை.

## அறிவிக்கை.

1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 16-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப்பகுதியை 06.11.2024 நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

### விவர அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | நீலகிரி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | குந்தா |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 5, (பழைய எண். 14), கீழ்குந்தா |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | கெத்தை கூடுதல் வன வட்டாரம் |
| 5. | வன வட்டாரத்தின் நில அளவை எண் | : | 900 (பழைய நில அளவை எண். 320) |
| 6. | வனவட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு | | 22.21 எக்டர் |

### நாற்புற எல்லைகள்.

**வடக்கு.-** இவ்வெல்லையானது எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள் 882, (பழைய நில அளவை எண்.335), 883 (பழைய நில அளவை எண்.330) மற்றும் 900 (பழைய நில அளவை எண்.320) ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பில் தொடங்கி எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள் 883 (பழைய நில அளவை எண்.330) மற்றும் 895 (பழைய நில அளவை எண்.321) ஆகியவற்றின் தெற்கு எல்லை நெடுகிலும் பொதுவாக வடகிழக்கு, தென்கிழக்கு நோக்கி சென்று எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள் 900 (பழைய நில அளவை எண்.320), 895 (பழைய நில அளவை எண்.321), 899 (பழைய எண். 386) மற்றும் 898 (பழைய நில அளவை எண். 318) ஆகியவை சந்திக்கும் சந்திப்பை அடைகிறது.

**கிழக்கு**.- பின்னர், இவ்வெல்லையானது எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண். 898 (பழைய நில அளவை எண். 318) மேற்கு எல்லை நெடுகிலும் தெற்கு, கிழக்கு, தென்கிழக்கு நோக்கி சென்று எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள் 900 (பழைய நில அளவை எண்.320), 898 (பழைய நில அளவை எண். 318) மற்றும் 903 (பழைய நில அளவை எண். 319) ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பை அடைகிறது.

**தெற்கு**.- பின்னர், இவ்வெல்லையானது எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள் 903 (பழைய நில அளவை எண். 319) மற்றும் 901 (பழைய நில அளவை எண். 384) ஆகியவற்றின் வடக்கு எல்லை நெடுகிலும் பொதுவாக மேற்கு, வடக்கு, வடமேற்கு, தென்மேற்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி சென்று எண்.7, கிண்ணக்கொரை கிராமம், எண். 6 மேல்குந்தா கிராமம் மற்றும் எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண்கள். 882 (பழைய நில அளவை எண். 335), 900 (பழைய நில அளவை எண். 320) மற்றும் 901 (பழைய நில அளவை எண். 384) ஆகியவை சந்திக்கும் சந்திப்பை அடைகிறது.

**மேற்கு**.- பின்னர், இவ்வெல்லையானது எண். 5 (பழைய எண். 14), கீழ்குந்தா கிராமம் நில அளவை எண். 882 (பழைய நில அளவை எண். 335) தென்மேற்கு எல்லை நெடுகிலும் வடகிழக்கு நோக்கி சென்று ஆரம்ப புள்ளியை அடைகிறது.

இவ்வன வட்டாரத்தில் பின்வரும் உரிமைகள் அனுமதிக்கப்படுகின்றன.

1. நில அளவை எண்.898 (பழைய நில அளவை எண்.318)-ன் மேற்கு எல்லையில் தொடங்கி 518 இணைப்புகள் கொண்ட பக்க எல்லையின் 295-வது இணைப்பில் வன வட்டாரத்திற்குள் நுழைந்து, மேற்கு நோக்கி 3653 இணைப்புகள் (அல்லது) 730.60 மீ தூரம் சென்று, நில அளவை எண்.882 (பழைய எண்.335) (L.G.B. Estate) 2687 இணைப்புகள் தூரம் கொண்ட பக்க எல்லையில் எண் 5 (பழைய எண் 14) கீழ் குந்தா கிராம நில அளவை எண்.900 (பழைய எண்.320)-ன் தெற்கு எல்லையிருந்து 2055-வது இணைப்பில் வெளியேறுகிற, மோட்டார் வாகனங்கள் செல்லத்தக்க 20 இணைப்புகள் (அல்லது) 4 மீ அகலம் கொண்ட சாலையை திருவாளர்கள்

L.G.B. Estate Management மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. மேலும் தேவையேற்படும் போதெல்லாம் மாவட்ட வன அலுவரின் முன் அனுமதியுடன் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு திருவாளர்கள் L.G.B. Estate Management அனுமதிக்கப்படுகிறது. இவ்வனுமதிக்கப்பட்ட சாலையின் கோண அளவுகளும் தூரமும் வருமாறு:-

| நிலையம் | | கோணஅளவுகள் (டிகிரியில்) | தூரம் (லிங்கில்) |
|---|---|---|---|
| முதல் | வரை | | |
| 1 | 2 | 228 (BB) | 320 |
| 2 | 3 | 240 (BB) | 83 |
| 3 | 4 | 296½ (BB) | 190 |
| 4 | 5 | 254½ (BB) | 243 |
| 5 | 6 | 276 ½ (BB) | 253 |
| 6 | 7 | 233 ½ (BB) | 128 |
| 7 | 8 | 251½ (BB) | 276 |
| 8 | 9 | 251 (BB) | 250 |
| 9 | 10 | 264 (BB) | 115 |
| 10 | 11 | 252 (BB) | 135 |
| 11 | 12 | 252 (BB) | 170 |
| 12 | 13 | 244½ (BB) | 120 |
| 13 | 14 | 246½ (BB) | 145 |
| 14 | 15 | 245 (BB) | 215 |
| 15 | 16 | 280 (BB) | 220 |
| 16 | 23 | 295½ (BB) | 360 |
| 23 | 24 | 258½ (BB) | 163 |
| 24 | 25 | 267½ (BB) | 267 |
| | | மொத்தம் | 3653 லிங்கு அல்லது 730.6 மீட்டர் |

2. மேலே தொடர் எண்1-இல் அனுமதிக்கப்பட்ட உரிமை மட்டுமல்லாது. மேற்சொன்ன உரிமை எண்1-இல் குறிப்பிடப்பட்டுள்ள

..10.

மோட்டார் வாகனங்கள் செல்லத்தக்க சாலையிலிருந்து நிலைய எண்.16 இல் பிரிந்து வன வட்டாரத்தின் தென்மேற்கு நோக்கிச் சென்று 189 இணைப்புகள் பக்க எல்லையில், நில அளவை எண்.901 பழைய எண் 384)-இன் வடக்கு எல்லையிலிருந்து 35 இணைப்புகள் வரை செல்கிற 1202 இணைப்புகள் அல்லது 240.40 மீ. நீளமும் 4 மீ. அகலமும், கொண்ட மண் சாலையைப் (அணுகு சாலை) பயன்படுத்த, கார்த்திக் பிளாண்டேஷனைச் சேர்ந்த திரு.ஆர்.கருணாநிதி என்பவருக்கு அனுமதிக்கப்படுகிறது. திரு.ஆர்.கருணாநிதி அவர்கள், மேற்சொன்ன சாலையில் தேவைப்படும் போதெல்லாம் மாவட்ட வன அலுவரின் முன் அனுமதியுடன் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது. இவ்வனுமதிக்கப்பட்ட சாலையின் கோண அளவுகளும் தூரமும் வருமாறு:-

| நிலையம் | | கோண அளவுகள் (டிகிரியில்) | தூரம் (லிங்கில்) |
|---|---|---|---|
| முதல் | வரை | | |
| 16 | 17 | 269½ (BB) | 214 |
| 17 | 18 | 248½ (BB) | 279 |
| 18 | 19 | 248½ (BB) | 139 |
| 19 | 20 | 236(BB) | 339 |
| 20 | 21 | 245½ (BB) | 150 |
| 21 | 22 | 154½(BB) | 81 |
| | | மொத்தம் | 1202 லிங்ஸ் அல்லது 240.40 மீட்டர் |

3. இவ்வனவட்டாரத்தின் வடக்கு பக்கத்தினூடே 3 அங்குலம் விட்டமும் 1500 லிங்ஸ் நீளமுள்ள ஏற்கனவே உள்ள தண்ணீர் குழாய் தொடரமைப்பு செல்லவும் இதனை பெகும்பள்ளா முகாமின் செயற்பொறியாளரும் அவருடைய அலுவலர்களும் தேவை ஏற்படும்போது மாவட்ட வன அலுவலரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**சுப்ரியா ஸாஹு**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

7/5/2024.

பிரிவு அலுவலர்

07/05/2024